முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்சோழ நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.01.2022, திங்கட்கிழமை

1. புதுமை படைக்க வந்த ஞானியே
புண்ணிய பலம் கொண்ட தவசியே
பூதலம் தன்னில் உன்பெருமை கூறி
புகலுவேன் துல்லிய ஆசிதனை
2. ஆசிதனை பிலவ சிலை திங்கள்
அறிவிப்பேன் மூவாறோர் திகதி சோமவாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 19ம் நாள், 03.01.2022 திங்கட்கிழமை)
பேசிடுவேன் புகழ்சோழநாயனார் யானும்
புகலுவேன் உலகநாலம் காண
3. காணவே அரங்க மகானின்
கருணைவடிவான அன்னதான
ஞான சேவை மார்க்கம்தனை
நம்பிக்கை வைத்து மக்கள்வர
4. வருகவே தரும பலம் கூடியே
வருகின்ற மக்களின் வாழ்வில்
முருகப் பெருமான் அருளும்
முழுமையான தரும வடிவாக வந்து
5. வந்துமே பாதுகாப்பு கூடும்
வளர்ச்சியும் மாற்றமும் காணும்
சிந்தையில் தெளிவும் திடமும்
சேவை வழியில் ஈடுபாடும் மிகுந்து
6. மிகுந்துமே ஞான ஆற்றலெனும்
முருகப்பெருமான் துணை கூடி
தகுந்தவண்ணம் எல்லாவகையும்
தடையின்றி மாற்றம் காணும்
7. காணவே அரங்க ஞானியரின்
கலியுக மாற்றம் சேவையில்
ஞானவான்களாக தொண்டர்கள்
நல் தேற்றம் கண்டு இனிதே
8. இனிதே அரங்கன் தேடலில்
எல்லோரும் ஞானிகளாவர்
துணிவுபட அன்னதானமதை
தொடர்ந்து செய்யும் மக்களுக்கு
9. மக்களுக்கு கண்டம் அல்லலிலா
மரணம் வெல்லும் சக்தியும்
தேக்கமின்றி தேட்டுதனவளமும்
தெய்வீக பலமும் கூடி நன்கு

10. கூடியே கலியுகம் மாற்றம்
குருவரங்கன் தவ சேய்களாக
கூடியே உலகமாற்றம் புரிவர்
குறைவிலா மாற்றம் நிகழ

11. நிகழ அரங்கர் குடில்தன்னில்
நீதிமான்கள் பெருக மாற்றம்
யுகமாற்றமாக நடக்கும் சடுதி
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–